# புழுதியிலிருந்து உயர்த்தும் தேவன்



சகோதரி. நிஜா கென்னடி

சிலர் தங்களை மிகவும் நல்லவர்களாகவும், நீதிமான்களாகவும் தங்களுக்கு தாங்களே எண்ணிக் கொண்டிருக்கின்றனர். மற்றவர்களையோ இழிவாக, அற்பமாக எண்ணுகிறார்கள். பெருமையுள்ளவர்கள்தான் தங்களை உயர்வாகவும், மற்றவர்களை தாழ்வாகவும் எண்ணுவார்கள். மற்றவர்களை அசட்டைபண்ணுவார்கள். சிலர் தாங்கள் மட்டுமே அறிவில் சிறந்தவர்கள், எல்லா காரியங்களையும் அறிந்திருக்கிறார்கள் என்றும் மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும் நினைக்கிறார்கள். இன்னும் சிலர் தங்கள் தொழிலில் தாங்கள் மட்டுமே சிறந்தவர்கள், தங்களுக்கு நிகர் வேறுயாருமில்லை என்றும் நினைக்கிறார்கள். இன்னும் சிலர் தங்களுக்கு பிடித்தவர்களை உயர்வான இடத்தில் வைப்பார்கள். பிடிக்காதவர்களை தாழ்வான இடத்தில் வைத்து, இன்னும் சொல்லப்போனால், அவர்களை ஒரு பொருட்டாகக் கூட எண்ணுவதில்லை. இன்னும் சிலர் தங்கள் பிள்ளைகளை உயர்வாகவும், மற்றவர்கள் பிள்ளைகளை தாழ்வாகவும் பார்ப்பார்கள். இவையெல்லாம் மனுஷனுடைய சுயநீதியினால் வருவது. தங்களுக்கு தாங்களே உண்மையாக, சரியாகத்தான் இருக்கிறோம், நீதியாகத்தான் நடக்கிறோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் வேதம் என்ன கூறுகிறது என்று பாருங்கள் : மனுஷனுடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தையைப்போல இருக்கிறது (ஏசாயா 64:6).



ஒரு மனிதன் எல்லா துறைகளிலும் சிறந்து விளங்கமாட்டான். அவனது ஆர்வம் எதில் உள்ளதோ, அந்த துறையில் அவன் சிறந்து விளங்குவான். ஒருவனுக்கு ஒரு குறிப்பிட்ட வேலை செய்ய தெரியவில்லை என்பதற்காக, அதைச் சுட்டிக்காட்டி, அவன் மனதை புண்படுத்தி சோர்வடையச் செய்யக்கூடாது. நாம் அவனுக்கு எந்த துறையில் ஆர்வம் உள்ளது என்பதைக் கண்டு அறிந்து, அதில் அவனை தேர்ச்சியடையுமாறு புத்திமதி சொல்ல வேண்டும். எல்லோரும் எல்லா காரியங்களையும் அறிந்திருக்கமாட்டார்கள். ஆண்டவர் இந்த உலகத்திலுள்ள எல்லோரையும் ஒரே விதத்தில் உருவாக்கவில்லை. முதலாவது அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதனை நாம் புரிந்து கொள்வதற்கு அவனோடு நமக்கு ஒரு உறவுநிலை வேண்டும். அதற்கும் மேலாக அவனை நாம் நேசிக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளையை எப்படிப் பார்ப்பாரோ (எந்த கண்ணோட்டத்தில்) அப்படிப்பட்ட கண்ணோட்டம் நமக்கு வேண்டும். நாம் எப்படி இயேசுவின் பிள்ளைகளோ, அதேபோல அவர்களும் இயேசுவின் பிள்ளைகள்தான். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பில் பட்சபாதம் இல்லை. ஒருவனை மேன்மையாகவும் மற்றவனை அற்பமாகவும் பார்க்கிற அப்படிப்பட்ட அன்பு அவரிடத்திலில்லை.

ஒருவன் உலகத்தில் நடப்பவற்றை துல்லியமாக அறிந்து வைத்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் இன்னொரு மனிதன் அவற்றை அறிந்து வைத்திருக்கவில்லை என்றால் அவன் அறிவில் குறைந்தவன் என்று அற்பமாக எண்ணி அவனை ஒதுக்கி வைத்து விடக்கூடாது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு திறமை, ரசனை இருக்கும். திறமைகள் வேறுபடலாம். தேவன்தான் அவர்கள் எல்லோரையும் படைத்திருக்கிறார். கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவே அறிவு. அப்போஸ்தலனாகிய பவுல், தனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ, அவைகளை கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவுக்கு முன்பாக நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன் என்று கூறுகிறான். எல்லாவற்றையும் விட்டுவிட்டு, கர்த்தருக்காக, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய ஒப்புக் கொடுத்தான். நாம் இந்த உலகத்தில் காண்கின்றவைகள் எல்லாம் அழிந்து போகக்கூடியவை. அவைகளைப் பற்றி அறிகிற அறிவும் அழிந்து போகும். ஏனென்றால் அழிந்து போகின்ற இந்த உலகத்தைப் பற்றிய அறிவும், இந்த உலகம் அழியும்போது, அவசியமில்லாமல் போய்விடும்.

ஆனால் அதே சமயத்தில் என்றும் அழியாத பரலோகத்தைக் குறித்தும், பரலோகத்தின் தேவனாகிய நம் கர்த்தரைக் குறித்தும் அறிந்து கொள்வது நமக்கு நித்திய ஜீவனைத் தரும் (யோவான் 17:3). நாம் காண்கின்ற மனுஷனுக்கு இயேசு கிறிஸ்துவைப்பற்றிய அறிவு இருந்து இந்த உலகத்தைப் பற்றிய அறிவு இல்லாமல் இருந்திருக்கும். இப்படிப்பட்ட மனுஷனை நாம் அற்பமாக எண்ணினால் நாம்தான் அந்த மனுஷனுக்கு முன்பாக நம்மை அறியாமலேயே அற்பமாய் போனோம்.

சிலர் தங்களுடைய பிள்ளைகள் சிறிய காரியம் செய்தாலும் அதை பெரிதாக பேசுவார்கள். ஆனால் மற்ற பிள்ளைகள் பெரிய காரியங்கள் செய்திருப்பார்கள். அதை அவர்கள் கண்டு கொள்ளவே மாட்டார்கள். தங்கள் பிள்ளைகளின் படிப்பை, திறமைகளை மற்றவர்களிடம் மிகைப்படுத்தி பேசுவார்கள். ஆனால் அது கர்த்தருடைய ஆசீர்வாதம் என்பதை அறியாதிருப்பார்கள். மற்றவர்களின் பிள்ளைகளையும் கர்த்தர் அப்படிப்போல ஆசீர்வதிப்பார் என்பதையும் அறியாதிருப்பார்கள். விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலுமல்ல, இரங்குகிற தேவனாலேயாம் (ரோமர் 9:16), பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் (சகரியா 4 :6) என்று கர்த்தரே சொல்லியிருக்கிறார். பிள்ளைகளைக் கொடுப்பது கர்த்தர். அந்த பிள்ளைகளுக்கு அறிவு, ஞானம், திறமை, தாலந்து இவற்றையெல்லாம் கொடுப்பது கர்த்தர். அவற்றையெல்லாம் வெளிப்படுத்தும்படியான சூழ்நிலைகளை உண்டாக்கி, அதை வாய்க்கச் செய்வதும் கர்த்தரே. நம்முடைய கரத்தில் ஏதுவும் இல்லை. அந்த அறிவு இல்லாததினாலே பெருமை, கர்வம், மேட்டிமை, இவையெல்லாம் ஒரு மனுஷனுக்குள் உண்டாகி, மற்றவர்களை அசட்டை பண்ண வைக்கிறது.

## பணமா? தேவனா?

சிலர் பணம் படைத்தவர்களை உயர்வாகவும், கஷ்டப்படும் ஏழை ஜனங்களை தாழ்வான இடத்திலும் வைத்து அற்பமாக பார்ப்பார்கள். நாம் அப்படியாக இருக்கக் கூடாது. எல்லோரையும் ஒரே மாதிரியாக பட்சபாதமற்றவர்களாக நடத்த வேண்டும். நம் உள்ளத்திலும், செயலிலும் நாம் அப்படியாக நடந்து கொள்ளவேண்டும். ஐசுவரியவான் தனக்காகவே மட்டும் பொருட்களையும் பணத்தையும் சேர்த்து வைத்து, மனிதர்களுடைய பார்வையில் அவன் பணக்காரனாக காணப்படுகிறான். ஆனால் தேவனுடைய பார்வையில் அவன் பணக்காரன் அல்ல. அவன் தேவனை நம்பாமல் பணத்தை நம்பி, சேர்த்து வைத்து யாருக்கும் உதவி செய்யாமல் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும்போது ஒரு பிரயோஜனமும் கிடையாது. அவன் பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியாது. மனிதர்களுடைய பார்வையில் ஏழை, தரித்திரனாகக் காணப்படுவான். ஆனால், அவன் தேவனுடைய பார்வையில் விசுவாசத்தில் ஐசுவரியமுள்ளவனாக இருக்கிறான். ஏனென்றால் தேவனையே, நம்பி, அவரைப் பற்றிய அறிவில் நிறைந்திருப்பதால் தேவன் அவர்களுக்கு வாக்கு பணிணினதை பெற்றுக் கொள்வார்கள். பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள். பணக்காரரை நாம் மற்றவர்களை விட முக்கியமானவர்களாக நடத்தினால் அது பாவம். மேலும் பணத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களை நாம் உயர்வாக எண்ணக்கூடாது. தேவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களையே நாம் உயர்வாக எண்ண வேண்டும். சமுதாயத்தில் உயர்ந்த பதவியில் இருப்பவர்களையும், பணம், புகழ் பெற்றவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, பணம், அந்தஸ்து, உயர்ந்த பதவியிலில்லாதவர்களை புறக்கணித்து அற்பமாக எண்ணக்கூடாது. இயேசு கிறிஸ்து ஜனங்களை எப்படி நடத்தினாரோ அதுபோல நாம் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும். எனக்கு தெரிந்த ஒரு சகோதரி சமுதாயத்தில் உயர்ந்த பதவியிலிருப்பவர்களையும், பணம் படைத்தவர்களையும் மிக உயர்வாக பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்களை சுற்றியிருப்பவர்கள் தாங்கள் அப்படியாக உயர்ந்த பதவியில் இல்லையே, அவ்வளவு பணம் நமக்கு இல்லையே என்று நினைக்குமளவுக்கு அவர்களது பதவியையும், பணத்தையும் உயர்வாக பேசிக்கொண்டிருப்பார்கள். பிரியமானவர்களே இந்த சகோதரியிடம் காணப்படும் இரண்டு காரியங்கள் : ஒன்று, பணத்தின் நிமித்தமும், பதவியின் நிமித்தமும் ஒருவரை உயர்வாய் பார்க்கிறார்கள். இரண்டு, தன்னை சுற்றியிருப்பவர்களின் வாழ்க்கையைக் குறித்து அக்கரை சிறிதேனும் இல்லை. அவர்களது மனது புண்படுமே என்று நினைக்கவில்லை. அவர்களை தாழ்வு மனப்பான்மைக்குள்ளாக தள்ளுகிறார்கள்.

## சுயநீதி

*தாங்கள் அழுக்கறக் கழுவப்படாமலிருந்தும், தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு.*

*- நீதிமொழிகள் 30 :12*

சிலர் தாங்கள் செய்வதெல்லாம் சரியானது என்று நினைத்து செய்து கொண்டிருப்பார்கள். அப்படி அவர்கள் ஒரு காரியத்தை செய்யும்போது, இருதயத்தில் என்ன நோக்கத்தோடு அதைச் செய்கிறார்கள் என்பதை தேவன் அறிவார். வெளியே வேறொரு காரணத்தைச் சொல்லி சமாளிக்கலாம். ஆனால் கர்த்தரோ இருதயத்தை அறிந்திருக்கிறார். கர்த்தர் அந்த காரணத்தைச் சொல்லி, அவர்கள் செய்கைக்குத்தக்கதாக நியாயம் செய்வார். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் சுயநீதியோடு இருப்பதுதான். அவர்கள் சுயவழியில் நடக்கும்போது, அந்த காரியத்தை வெற்றியோடு செய்து முடிக்க முடியாது. அதோடு கூட அவர்கள் வாழ்கையில் கஷ்டங்களும், போராட்டங்களும், துன்பங்களும், சமாதானக் குறைவும் வரும். தங்கள் சுயவழியை விட்டு, தேவனை நம்பி அவரிடம் வரும்போது, தேவன் அவரது வழியை அவர்களுக்கு காண்பித்து, வெற்றியோடுகூட முடிக்க உதவி செய்வார். ஆனால் சிலர் நாங்கள் எங்கள் சுய வழியில்தான் நடப்போம் என்று சொல்லி தேவனுடைய வழியை அசட்டை பண்ணுகிறார்கள்.

## நீதிமானாக்கும் இரத்தம்

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படாதவர்கள்தான் சுயநீதியின்படி நடப்பார்கள். தனக்குத்தானே நீதிமான் என்று நினைத்து, தான் எல்லா காரியங்களிலும் சரியாகத்தான் இருக்கிறேன் என்றும், தங்களில் ஒரு குற்றமும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். தேவனுடைய பார்வையில் சுயநீதி அழுக்கான கந்தையைப் போல் இருக்கிறது. நாம் எந்தவித தவறுகளை செய்யாமல், குற்றமற்றவர்கள் என்றாலும் அது நம்மை நீதிமான்களாக மாற்றாது. நியாயப்பிரமாணத்தின்படி நடந்தாலும் நாம் நீதிமானாக முடியாது. நியாயப்பிரமாணம் பாவம் எது என்பதை சுட்டிக் காட்டும். தேவநீதியை அறியாதவர்கள் சுயநீதியின்படி நடந்து தேவநீதிக்கு கீழ்ப்படியாமல் போகிறார்கள். கர்த்தரே நம்மை நியாயம் விசாரிக்கிறவர்; அவரே நம்மை நீதிமானாக்குகிறவர். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய இரத்தத்தினால் கழுவப்படாமல் யாரும் நீதிமானாக முடியாது. சிலர் ஒரு தவறும் செய்திருக்க மாட்டார்கள்; அநேக நல்ல காரியங்களைச் செய்வார்கள் ; ஏழைகளுக்கு தான தருமங்களைச் செய்வார்கள். இவர்கள் செய்த எல்லா நன்மையான செயல்களும், காரியங்களும் தேவனுடைய பார்வையில் அழுக்கான ஆடையைப்போல் உள்ளது. அவர்கள் நல்ல காரியங்களை செய்ததால், அவர்களுக்கு அவர்களே நீதிமான்களாக எண்ணிக்கொள்வார்கள். இதுதான் மனுஷநீதி-சுயநீதி. தேவனைத்தவிர



நல்லவன் ஒருவனும் இல்லை. எல்லா மனிதர்களும் பிறக்கும்போதே பாவத்தோடு கூடத்தான் பிறக்கிறார்கள். அதனால்தான் தாவீது ராஜா இப்படியாகக் கூறுகிறான் : இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் (சங்கீதம் 51 :5). நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு, இயேசு கிறிஸ்துதாமே தமது சரீரத்திலே நம் எல்லோருடைய பாவங்களையும் சிலுவையின் மேல் சுமந்தார். நாம் பாவங்களை அறிக்கை செய்யும்போது, நம்முடைய பாவங்களை அவருடைய இரத்தத்தினால் கழுவி சுத்திகரித்து நம்மை பரிசுத்தப்படுத்தி, பாவத்திலிருந்து மீட்டெடுத்து நம்மை நீதிமான்களாக்குகிறார்.

## தாழ்த்துவதினால் வரும் உயர்வு

*அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக் குறித்து, அவர் (இயேசு கிறிஸ்து) ஒரு உவமையைச் சொன்னார்.*

*- லூக்கா 18 : 9*

வரிவசூலிப்பவனும், பரிசேயனும் ஒருநாள் தேவாலயத்திற்கு ஜெபம் பண்ணும்படி சென்றனர். பரிசேயன் இப்படியாக ஜெபிக்கிறான் : நான் திருடன், ஏமாற்றுகிறவன், விபச்சாரக்காரன் ஆகிய மற்ற தீய மனுஷரைப்போலவும், ஆயக்காரனைப் போலவும் இராததினால் உமக்கு நன்றி என்று சொல்கிறான். தன்னையே மேன்மை பாராட்டி, மற்றவர்களோடு ஒப்பிட்டு ஜெபிக்கிறான். தான் வாரத்தில் இருமுறை உபவாசிப்பதாகவும், தனக்கு வரும் எல்லா வருமானத்திலும் தசமபாகம் செலுத்துவதாகவும் கூறுகிறான். ஆனால் வரிவசூலிப்பவனோ தன்னைத் தாழ்த்தி, "தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஜெபிக்கிறான். தான் பாவி என்பதை



ஒப்புக்கொண்டு, தன்னை தாழ்த்தினதால் நீதிமானாக்கப்பட்டான். தேவனுடைய கிருபை அவன் மேல் வந்தது. அவன் தன்னை தாழ்த்தினபடியால் தேவன் அவனை உயர்த்தினார். பரிசேயனோ தேவனுக்கு உகந்தவனாக இருக்கவில்லை. தன்னை உயர்ந்தவனாக நினைத்து ஜெபித்தான். பாருங்கள் அவன் தவறாமல் ஆலயத்துக்குச் செல்லுகிறான். தேவனிடம் ஜெபிக்கிறான், நன்றி சொல்லுகிறான், உபவாசிக்கிறான், தசமபாகம் கொடுக்கிறான். இவற்றையெல்லாம் அவன் ஒழுங்காக செய்தும் கூட தேவனுடைய பார்வையில் அவன் நீதிமானாகக் காணப்படவில்லை. ஏனென்றால் அவன் சுயநீதியுடையவனாக இருந்தான்.

*எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.*

*- ரோமர் 10 : 3*

சுயநீதி, பாவமாகும். அது நம்மை பெருமைக்கு நேராக வழி நடத்தி மற்றவர்களை அசட்டையாகவும், அற்பமாகவும் எண்ணும்படி செய்கிறது. தேவனிடமிருந்து நாம் ஒன்றையும் கற்றுக்கொள்ள முடியாதபடி தடை செய்கிறது. நாம் எந்த ஒரு காரியத்தையாவது, வெற்றியோடு செய்து முடித்துவிட்டோம் என்றால் நாம் பெருமை கொள்ளக்கூடாது. நமக்கு அதை வாய்க்கச் செய்தது கர்த்தர்தான். அதனால் அவருக்கே நாம் மகிமை செலுத்த வேண்டும். அவருடைய கிருபையும், தயவும் இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

பரிசேயர்கள் நியாயப்பிரமாணத்தின்படி நடந்து, முன்னோர்கள் கடைபிடித்து வந்த பாரம்பரியத்தை பின்பற்றி வந்தார்கள். எந்த நோக்கத்திற்காக தேவன் அந்தக் கட்டளையை ஏற்படுத்தினார் என்பதைவிட பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். தேவனைப் பின்பற்றுவது சடங்காச்சாரமாக மாறிவிட்டது. தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய மறுத்தனர். தாங்கள் செய்வதே சரி என்று





சொல்லி, தங்களது சுயவழியில் நடந்தார்கள். மனுஷர்கள் உண்டாக்கிய சட்டங்களை போதித்தார்கள். தேவனுடைய கட்டளைகளை விட்டு விலகிப் போனார்கள். எல்லோரும் காணும்படியாக பார்வைக்கு ஜெபம் பண்ணினார்கள். தேவன்மீதுள்ள அன்பினால் அவர்கள் ஜெபிக்கவில்லை. அவர்கள் முழு இருதயத்தோடு தேவனைத் தேடவில்லை. தங்கள் வாயினால் தேவனை துதித்தார்கள்; அவர்கள் இருதயமோ தேவனிடத்தில் இல்லை. மனிதர்கள் தங்களை புகழவேண்டும், நல்லவர்கள் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக வெளியே நல்லவர்கள் போல நடித்தார்கள். அவர்கள் உள்ளமோ சகலவித பாவங்களினாலும், அசுத்தங்களினாலும் நிறைந்திருந்தது. பெயருக்கு கிறிஸ்தவர்களாக வாழ்ந்தார்கள். மதத்தின்மேல் பற்றுள்ளவர்களாய் இருந்தார்களேயொழிய தேவன் மீது உண்மையான அன்பு இல்லை.

## உயர்த்தும் கர்த்தர்

அன்பானவர்களே! நீங்கள் பிறரால் அற்பமாக எண்ணப்படுகிறீர்களா? மனிதர்கள் உங்களை அற்பமாக பார்க்கிறார்கள் என்று கவலைப்படாதிருங்கள். கர்த்தர் உங்களை எப்படியாகப் பார்க்கிறார் என்பதற்கு முக்கியத்துவம் கொடுங்கள். மனிதர்கள் பார்க்கிற விதமாக நம் தேவன் பார்க்கமாட்டார். நம் தேவன் இருதயத்தையே பார்க்கிறார். நமக்கு நல்ல படிப்பு இல்லாததால், நல்ல வேலை இல்லாததால், நிறைய பணம் இல்லாததால், உயர்ந்த ஜாதியாய் இல்லாததால், செல்வ செழிப்பாய் இல்லாததால், திறமைகள் இல்லாததால் மனிதர்கள் அற்பமாய் பார்க்கிறார்கள் என்று வேதனைப்படுகிறீர்களா? கர்த்தர் நம் அந்தஸ்து, வேலை, படிப்பு, பணம், ஜாதி, திறமைகள் ஆகியவற்றை வைத்து நம்மை நேசிக்கிறவர் அல்ல. நம் இருதயத்தையே கர்த்தர் பார்க்கிறார். யார் யார் உங்களை அற்பமாக எண்ணினார்களோ அவர்கள் யாவரும் வெட்கப்பட்டுப் போகும்படியாக அவர்களுக்கு முன்பாக தேவன் உங்களை உயர்த்த வல்லவராயிருக்கிறார். தாவீதைப் பாருங்கள். அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அவனது மூத்த மூன்று சகோதரர்கள் சவுலின் இராணுவத்தில் யுத்த வீரர்களாய் இருந்தார்கள். அவர்களை விசாரித்து வரும்படியாக அவனது தகப்பனார் தாவீதை அவர்களிடத்திற்கு அனுப்பினார். அப்பொழுது இஸ்ரவேலருக்கு எதிராக பெலிஸ்தியரில் கோலியாத் என்பவன் பேசிக் கொண்டிருந்ததை தாவீது கேட்டான். இஸ்ரவேலரில் ஒருவனும் அவனுக்கு எதிர்த்து போரிட முன்வராமல் பயந்து ஓடினர். தாவீது ஒரு தடியையும், ஐந்து கூழாங்கற்களையும், கவணையும் எடுத்துக்கொண்டு

கோலியாத்தை முறியடிக்கச் சென்றான். தாவீது இளைஞனும், யுத்தத்தில் பயிற்சியில்லாதவன் என கோலியாத் கண்டு அவனை அசட்டை பண்ணினான் (1 சாமுவேல் 17:42). நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா என்று



சொல்லி தாவீதை சபித்தான். தாவீது அவனிடம் நீ பட்டயத்தோடும், கேடகத்தோடும், ஈட்டியோடும் என்னிடத்தில் வருகிறாய். நானோ தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன். யுத்தம் கர்த்தருடையது. அவர் உன்னை என் கையில் ஒப்புக் கொடுப்பார் என்று சொல்லி ஒரு கல்லை, கவணிலே வைத்து சுற்றி கோலியாத்தின் நெற்றியில் பட எறிந்தான். அவன் நெற்றிக்குள் அந்த கல் புகுந்ததால் அவன் தரையில் விழுந்தான். அவனது வாளை எடுத்து தாவீது அவனைக் கொன்று போட்டான். பாருங்கள் தன்னை அற்பமாக எண்ணின கோலியாத்தை கர்த்தருடைய நாமத்தினாலே தாவீது கொன்று போட்டான். கர்த்தர் நம்மோடு கூட இருக்கும்போது, நம்மை யார் அசட்டை பண்ணினாலும் கர்த்தர் நம்மோடு இருந்து நமக்கு எதிர்த்து நிற்பவர்களை முறியடித்துப் போடுவார்.

தாவீதின் தேவன்தான் நம்தேவன். தாவீதை எல்லா இராணுவ வீரர்களுக்கும், கோலியாத்திற்கும் முன்பாக எப்படிஉயர்த்தி கனப்படுத்தினாரோ அப்படி நம்மையும், நம்மை அற்பமாக எண்ணுபவர்களுக்கு முன்பாக உயர்த்துவார். நம்மை கனப்படுத்துபவர்கள்



யாரும் இல்லை என்று நாம் நினைக்கக் கூடாது. சர்வ வல்லமையுள்ள தேவன் நம் பட்சத்தில் இருக்கிறார். நம்மைக்கொண்டு பெரிய காரியங்களை செய்து நம்மை உயர்த்துவதற்காகவே நம்மோடு இருக்கிறார். அவர் ஒரு மனிதன் அல்ல. சர்வத்தையும் சிருஷ்டித்து, அதை ஆள்பவர். இவர் நம் தகப்பன். அவருடைய கிருபை நம்மை உயர்த்தும். ஆமென்!

### உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

இந்தப் பத்திரிக்கை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா ரூ. 200/-

வெளிநாட்டு வருட சந்தா ரூ. 2000/-

*S. PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD / M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.*

*ICICI* வங்கி கணக்கின் பெயர் : *S. PAULRAJ KENNEDY*

*ICICI* வங்கி கணக்கு எண் : 0350 0150 7744

### *எங்களது முகவரி*

எஸ். பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு. இந்தியா.


**FORM IV**

| | | |
|---|---|---|
| Place of Publication | : | A-1, Deju Plaza, 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. |
| Periodicity | : | Monthly |
| Printer's Name | : | Jolly Peter |
| Nationality | : | Indian |
| Address | : | New No.96, Old No.223, Peters Road, Royapettah, Chennai - 600 014. |
| Editor's Name | : | Nija Kennedy |
| Nationality | : | Indian |
| Address | : | A-1, Deju Plaza, 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. |
| Owner's Name | : | S. Paulraj Kennedy |

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 31-03-2009

Publisher

**S. Paulraj Kennedy**




இந்த பத்திரிக்கையை நீங்கள் படித்துவிட்டு மற்றவர்களுக்கும் படிக்கக் கொடுங்கள். எங்களுக்காகவும், எங்களுடைய ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பிரசன்னமும் எப்போதும் உங்களோடு இருப்பதாக!


*உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்*

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

*இணையதளம் :* **www.kennedyministries.org**




www.purposedrivenlife.com

- நம்மை நாமே பார்ப்பதினால், நமதுவாழ்க்கையின் நோக்கத்தைத் தெரிந்துகொள்ள முடியாது.
- நாம் கர்த்தரால் உண்டாக்கப்பட்டவர்கள்; அவருக்காக உண்டாக்கப்பட்டவர்கள்; இதை அறிந்துகொள்ளும்வரை நாம் நமது வாழ்க்கையின் அர்த்தத்தை அறிந்துகொள்ள முடியாது.
- உங்களது பெற்றோர் உங்களைப் பெற்றெடுப்பதற்கு வெகு காலத்துக்கு முன்பே, கர்த்தர் தம்முடைய மனதிலே உங்களை பெற்றெடுத்து விட்டார்.
- உங்களது வாழ்க்கையைக்குறித்து கர்த்தர் என்ன நோக்கம் வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்வதற்கு மேலாக ஒரு காரியமும் கிடையாது. வேறு எதுவும் அதை ஈடுசெய்ய முடியாது.
- உங்களது வாழ்க்கையின் நோக்கத்தை நீங்கள் அறிந்துகொள்ளும்போது, உங்களது வாழ்க்கை எளிமையான வாழ்க்கையாக மாறும்.
- பரலோக வாழ்க்கைக்கு நம்மை ஆயத்தப்படுத்துவதே இந்த வாழ்க்கை.
- நீங்கள், பரலோகத்தைக்குறித்த அறிவுடன் இந்த வாழ்க்கையை வாழும்பொழுது, உங்களது கண்ணோட்டம் மாறும். உங்களது கண்ணோட்டம் உங்களது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும்.
- உங்களது வாழ்க்கையை எப்படி வரையறுக்கிறீர்களோ அதுவே உங்களது வாழ்க்கை எங்கே செல்கிறது என்பதை முடிவு செய்யும்.
- வாழ்க்கைப்பற்றிய உங்கள் கண்ணோட்டம், உங்கள் பணத்தை, நேரத்தை, தாலந்துகளை, மற்றவர்களுடனுள்ள உறவுகளை எப்படி பயன்படுத்துகிறீர்கள் என்பதை முடிவு செய்யும்.
- மற்றவர்களை புரிந்துகொள்வதற்கு சிறந்த வழி : அவர்கள் எப்படி வாழ்க்கையை பார்க்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதே.



- காலம் தாழ்த்தும் வாக்குறுதிகள், பெரிய மாறுதல்கள், பதில் கிடைக்காத ஜெபங்கள், தீர்க்கமுடியாத பிரச்சனைகள், சம்பந்தமே இல்லாத விமர்சனங்கள் இவையெல்லாம் நம்மை கர்த்தர் சோதித்து அறிவதற்காகவே.
- முக்கியமான சோதனை கர்த்தருடைய பிரசன்னத்தை உணராதபோது உங்களது வாழ்க்கையில் எப்படி நடக்கிறீர்கள் என்பதே.
- இந்த பூமியில் நீங்கள் வாழ்ந்து அது முடிவுக்கு வரும்போது, உங்களுக்கு கர்த்தர் கொடுத்ததையெல்லாம் எப்படி பயன்படுத்தினீர்கள் என்பதை வைத்தே நிறுத்து பார்க்கப்படுவீர்கள்.
- உங்களுக்குக்குக் கர்த்தர் எவ்வளவு அதிகம் கொடுக்கிறாரோ, அவ்வளவு பொறுப்புணர்வை உங்களிடம் எதிர்பார்ப்பார்.
- கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாக வாழ்வதே, இந்த வாழ்க்கையில் நாம் அடையவேண்டிய சிறந்த காரியமாகும்.
- இயேசுவுக்காக நீங்கள் வாழும்போது அதற்குத் தேவையான எல்லாவற்றையும் அவரே தருவார்.
- உங்களிடம் கர்த்தர் எதிர்பார்க்கும் பெரிதான காரியம் - அவரோடு நீங்கள் கொள்ளும் உறவே.
- முழுமையாகக் கர்த்தர்மேல் நம்பிக்கை வைப்பதென்பது நமக்கு எது சிறந்தது என்பதை அவர் அறிவார் என்று விசுவாசிப்பதே.
- இயேசு கிறிஸ்துவைப்போல நம்மை உருவாக்குபவரே பரிசுத்த ஆவியானவர்.
- ஒவ்வொரு மனிதனும் தான் நேசிக்கப்பட விரும்புகிறான்.
- சமாதானம் பண்ணுகிறவர்கள் மிகக் குறைவு, ஏனென்றால், சமாதானம் பண்ணுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.
- மற்றவர்களோடு சேர்ந்து இருப்பதுவே ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான்.
- தாழ்மை என்பது உங்களைக் குறித்து மதிப்பிடுவது அல்ல. உங்களைக் குறித்து யோசிப்பதில் கொஞ்சமாகவும், மற்றவர்களைக்குறித்து யோசிப்பதில் அதிகமாகவும் இருத்தலாகும்.
- மற்றவர்களுடைய உணர்வுகளை நீங்கள் புரிந்துகொள்ளும்போது, உங்களது உறவு நிலையில் முன்னேறுகிறீர்கள்.
- அன்பு என்பது மற்றவர்களுடைய பிரயோஜனத்திற்காக நமது பணம், பலம், நேரம், பாதுகாப்பு, குறிக்கோள்களை விட்டுக் கொடுப்பதாகும்.
- கர்த்தர் நமது ஆவிக்குரிய முதிர்ச்சியை, மற்றவர்களுடனான நமது உறவு நிலையின் தரத்தை வைத்தே மதிப்பிடுகிறார்.

# கேட்கிறதைக் கவனியுங்கள் ④



*அவர் என்னோடே பேசும்போது, ஆவி எனக்குள் வந்து..*

*- எசேக்கியேல் 2 : 2*

கர்த்தர் பேசும்பொழுது, அதைக்கேட்ட எசேக்கியேல் தீர்க்கதரிசிக்குள் கர்த்தருடைய ஆவி வருகிறது. இதுதான் உன்னத பெலன். இதேபோல, நாமும் ஜெபத்திலே தரித்திருக்க, தரித்திருக்க உன்னத பெலனால் அதாவது கர்த்தருடைய பெலத்தால் நிரப்பப்படுவோம்.

இப்படி கர்த்தருடைய ஆவியானவர் நம்மோடு தொடர்ந்து இடைபடும்போடு, நாம் எப்போதும் அபிஷேகத்தில் நிரம்பி இருப்போம். இப்படிப்பட்ட எண்ணங்களோடு, எதிர்பார்ப்போடு நீங்கள் வேதத்தை படிக்க வேண்டும். இதையே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மாற்கு 4 : 23) என்கிறார். நம்முடைய ஒத்துழைப்பு இல்லாமல் கர்த்தரால் ஒன்றும் செய்ய முடியாது. நமக்கு விருப்பம் வேண்டும். அப்பொழுதுதான் வேதத்தைப் படிக்கவும், ஜெபிக்கவும் செய்வோம். கர்த்தருடைய ஆவியானவர், என்னோடு இடைபட வேண்டும் என்கிற வாஞ்சை, தாகம் வேண்டும். அதற்காகத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உவமைகளாகப் பேசினார். அவர் பேசுவதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருப்பவர்கள், வாஞ்சையும் தாகமும் உள்ளவர்கள், அவரிடம் கேட்டு தெரிந்து கொள்வார்கள். கேட்பதோடு விட்டுவிடாமல் அதன்படி நடக்கவும் செய்வார்கள். அதை அசட்டை பண்ணமாட்டார்கள். அதனுடைய விலையை மதிப்பிட முடியாது என்பதை அறிந்து வைத்திருப்பவர்கள் அவர்கள். கர்த்தருடைய ஆவியானவர், நம்மோடு வேதத்தின் வார்த்தைகள் மூலமாகவும், அமர்ந்த மெல்லிய சப்தம் மூலமாகவும் இடைபட, இடைபட கர்த்தருடைய சிந்தையை அறிந்து கொள்வோம். அவர் ஒரு மனுஷனை, மனுஷியை, ஒரு சூழ்நிலையை, ஒரு காரியத்தை எப்படி பார்க்கிறார் என்பதை அறிந்து கொள்ள ஆரம்பிப்பீர்கள். இப்பொழுது நீங்களும் அவரைப்போல நடக்க ஆரம்பிப்பீர்கள். அவர் பார்ப்பதுபோல எல்லாவற்றையும் பார்க்க ஆரம்பிப்பீர்கள். தேவனுடைய அன்பு உங்களை ஆளுகை செய்யும். உங்களை ஆளுகை செய்யும் அன்புதான் உங்களது வாழ்க்கையில் பிரதானமாக இருக்கும். அதனால், அனுதினமும் வேதத்தை படிப்பதற்கு முக்கியத்துவம் கொடுங்கள். கர்த்தருடைய வார்த்தையை நீங்கள் புரிந்து கொள்ளும்போது, உங்களது புத்தி (Understanding) கூர்மையாகும். அந்த வார்த்தையைவைத்து நீங்கள் ஜெபிக்கும்போது, உங்களது அறிவுக்கு எட்டாதக் காரியங்களை பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வெளிப்படுத்துவார். இப்போது உங்களது அறிவு (Knowledge), ஞானம் (Wisdom), புத்தி (Understanding) எல்லாம் கூர்மையாகும் (Sharpen). இதுவே உள்ளார்ந்த மனுஷனின் வளர்ச்சி அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியாகும். வேதத்தை படிக்கும்போது கர்த்தர் பேசுவார் என்ற நோக்கத்தோடு படிக்க வேண்டும். ஆவியிலே என்னை உயர்த்துகிற மிக பிரயோஜனமான காரியம் என்ற எதிர்பார்ப்போடு படிக்க வேண்டும். அதுபோல கர்த்தர் மற்ற மனிதர்கள் மூலமும் கூடப் பேசுவார். அதனால்தான் இயேசு கிறிஸ்து "காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்றும், "கேட்கிறதைக் கவனியுங்கள்" என்றும், "உள்ளவனெவனோ அவனுக்கு கூடக் கொடுக்கப்படும்" என்றும் கூறுகிறார். வேதத்திலே பிலேயாம் என்ற தீர்க்கதரிசி கர்த்தருக்குக் கீழ்ப்படியாதபோது அவனுடைய கழுதையை பேச வைக்கிறார் (எண்ணாகமம் 23:28). தீர்க்கதரிசி மோசேயோடேகூட அவனுடைய மாமன் எத்திரோ மூலம் பேசுகிறார் (யாத்திராகமம் 18:13-24). பிரதான அப்போஸ்தலனாகிய பவுலுடன் அகபு என்னும் ஒரு தீர்க்கதரிசி மூலம் பேசுகிறார் (அப்போஸ்தலர் 21:8-14). ஆம், எனக்குப் பிரியமானவர்களே, நம்மோடு பேசுவதற்கு கர்த்தர் எவரையும் பயன்படுத்த முடியும். எனக்கு எல்லாம் தெரியும், ஆவியானவர் என்னோடு கூடப் பேசிக் கொண்டிருக்கிறார், அதனால் மற்றவர்கள் என்ன பேசினாலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை என்று அசட்டையாய் இருந்துவிடாதீர்கள். யார் மூலம் வேண்டுமானாலும் கர்த்தர் நம்மோடு பேசுவார். அவர்கள் ஊழியக் காரர்களாகத்தான் இருக்க வேண்டும் என்றோ அல்லது தீர்க்கதரிசிகளாகத்தான் இருக்க வேண்டும் என்றோ இல்லை. எவர் மூலமும் கர்த்தரால் நம் கூடப் பேச முடியும். இது, 'ஞானத்தைப் போதிக்கும் வசனம்' என்ற வரம் செயல்படும் விதமாகும். நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்.

**- தொடரும்**